**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

C 8348062

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு  Year: ஆண்டு 2025  FIR No.: மு.த.அ. எண் 05/AC/2025  Date: நாள் 22.04.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption  Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act, 1988 as amended by  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: the PC Amendment Act, 2018  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 19.04.2025  Date to : நாள் வரை 21.04.2025
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் சுமார் 1445 மணி  Time to : நேரம் வரை சுமார் 1200 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.04.2025  Time : நேரம் 19.45 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II  Time : நேரம் 21.00 மணி

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் : வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 70 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் : —
   (b) Address : முகவரி : உதவி பொறியாளர் அலுவலகம், த.மி.உ.ப.கழகம், தேன்கனிக்கோட்டை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : —  District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : M. முனிகிருஷ்ணா  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : முனிராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : வயது - 36  (d) Nationality : நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் :  Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation : தொழில் : விவசாயம்  (g) Address : முகவரி : 2/15, தொட்டிக்குப்பம், கைத்தள்ளி அஞ்சல், இருது கோட்டை கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. தனபால், வணிக ஆய்வாளர், உதவி பொறியாளர் அலுவலகம், த.மி.உ.ப.கழகம், தேன்கனிக்கோட்டை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்

240-2–FIR-Type-2–2070 Bundles–23-12-22–[Hp-i7-1]

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

முனிருஜ்ஜமான் 22.04.2025 — [signature] 22/4/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.04.2025 at 08.40hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ......................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
உள்.த.க. பிரிவு,
திருவண்ணாமலை.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 22.04.2025 ம் தேதி இரவு 19.45 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், இருதுகோட்டை கிராமம், கெத்தள்ளி அஞ்சல், தோட்டிக்குப்பத்தை சேர்ந்த திரு.முனிராஜ் மகன் திரு.M.முனிகிருஷ்ணா என்பவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து வாய்மொழியாக அளித்த புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு. திரு.M.முனிகிருஷ்ணா, த/பெ முனிராஜ், 2/15, தோட்டிக்குப்பம், கெத்தள்ளி அஞ்சல், இருதுகோட்டை கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவரது புகார் வாக்குமூலம். நான் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், இருதுகோட்டை கிராமம், கெத்தள்ளி அஞ்சல், தோட்டிக்குப்பம் என்ற ஊரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் இரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தமிழில் எழுத்துக்கூட்டி படிப்பேன் ஆனால் எழுத வராது. தமிழில் கையெழுத்து மட்டும் போடுவேன். எனக்கு திருமணமாகி மனைவி மற்றும் இரண்டு பையன்கள் இருக்கின்றனர். எனது அப்பா முனிராஜ் அவர்களுக்கு சொந்தமாக சுமார் 9 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் நான் ஒரு பகுதியில் விவசாயம் செய்து வருகிறேன். மீதி நிலத்தில் எனது நான்கு தம்பிகள் விவசாயம் செய்கின்றனர். இருதுகோட்டை கிராம சர்வே எண்.896/1A-வில் உள்ள எங்கள் நிலத்தில் சுமார் 2 மாதங்களுக்கு முன்பு புதிதாக போடப்பட்ட போர்வெல்லுக்கு EB சர்வீஸ் வாங்கி விவசாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக 17.03.2025-ம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு எனது அப்பா முனிராஜை அழைத்துக்கொண்டு தேன்கனிக்கோட்டை EB ஆபிசுக்கு சென்று 215 ரூபாய் பீஸ் கட்டி ஆன்லைனில் எனது அப்பா திரு.முனிராஜ் பெயரில் விவசாய EB சர்வீசுக்காக அப்ளிகேசன் போட்டேன். அதன்பிறகு சில நாட்கள் கழித்து CI திரு.தனபால் என்பவர் எங்கள் நிலத்திற்கு

நேரில் வந்து போர்வெல் மற்றும் மின் கம்பம் உள்ள இடம் ஆகியவற்றை பார்த்துவிட்டு EB சர்வீசுக்கு உரிய பீஸ் கட்டுமாறு சொல்லிவிட்டு சென்றார். அதனால் நான் கடந்த 03.04.2025-ம் தேதி மதியம் சுமார் 2 மணிக்கு மீண்டும் தேன்கனிக்கோட்டை EB ஆபிசுக்கு சென்று 16,410 ரூபாய் Phonepe மூலம் ஆன்லைனில் அரசுக்கு கட்ட வேண்டிய பீஸ் கட்டினேன். பிறகு போன வாரம் சனிக்கிழமை 19.04.2025-ம் தேதி மதியம் சுமார் 2.45 மணியளவில் எங்கள் EB சர்வீஸ் சம்மந்தமாக CI திரு.தனபால் என்பவருக்கு போன் செய்து அவரிடம் கேட்டபோது, அவர் என்னிடம் EB சர்வீஸ் கொடுப்பதற்கு தனக்கு பணம் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும், எனவே அவரை நேரில் வந்து பார்க்குமாறும் சொல்லி போனை வைத்துவிட்டார். அதனால் நான் நேற்று 21.04.2025 திங்கட்கிழமை பகல் சுமார் 12 மணிக்கு தேன்கனிக்கோட்டை EB ஆபிசுக்கு நேரில் சென்று அங்கிருந்த CI திரு.தனபால் என்பவரை பார்த்து எனது போர்வெல் EB சர்வீஸ் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் பணம் ரூபாய் பத்தாயிரம் தன்னிடம் கொடுக்குமாறு என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே அரசுக்கு கட்ட வேண்டிய பீஸ் 16,410 ரூபாய் ஆன்லைனில் கட்டிவிட்டேன் என்று சொன்னேன். அவர் எனக்கும் AE சாருக்கும் சேர்த்து பத்தாயிரம் ரூபாய் தனியாக கொடுத்தால்தான் சர்வீஸ் கொடுக்க முடியும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை கொஞ்சம் குறைச்சு சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் பணம் 7,000 ரூபாய் தன்னிடம் தனியாக கொடுத்தால்தான் உனக்கு சர்வீஸ் கொடுக்க முடியும் என்று கறாராக சொல்லிவிட்டார். நானும் சரி சார் பணம் ரெடி பண்ணிட்டு வர்றேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். தேன்கனிக்கோட்டை EB ஆபிஸில் வேலை செய்யும் CI திரு.தனபால் என்பவருக்கு லஞ்சமாக பணம் 7,000 ரூபாய் கொடுத்து EB சர்வீஸ் வாங்க எனக்கு விருப்பமில்லை, எனவே என்னிடம் லஞ்சமாக பணம் 7,000 ரூபாய் கேட்ட CI திரு.தனபால் என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட புகாரினை நான்

சொல்லச்சொல்ல, நீங்கள் உங்களது ஆபீசில் இருந்த கம்ப்யூட்டரில் டைப் அடித்து அதை என்னிடம் படித்துக்காண்பிக்க நான் கேட்டேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது. (ஒப்பம்) M.முனிகிருஷ்ணா 22.04.2025.

Sir, an oral complaint has been received by me on 22.04.2025 at 19.45 hrs and I typed the same in computer. It has been read by me to the complainant. Further a confidential verification on the general reputation of the accused Tr.Dhanapal has been made and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.05/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 22.04.2025 at 21.00 hrs against the accused Tr.Dhanapal, Commercial Inspector. The original FIR along with this complaint was sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

22/04/25

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.